செ.வெ.எண்.69 நாள் : 30.03.2020

# அரியலூர் மாவட்டம்
# வெளி மாநில பணியாளர்களை பணியில் வைத்துள்ள நிறுவனங்கள் அவர்களுக்கான சம்பளத்தை வழங்க வேண்டும் - மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் தகவல்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் **திரு.வீ.ஆர்.சீனிவாசன்** அவர்கள் கலந்துகொண்டனர்.

**இக்கூட்டத்தில், மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்கள் தெரிவித்ததாவது,**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள, குடும்ப அட்டைதாரர்களுக்கு இலவச பொருட்களுடன் கூடிய தலா ரூ.1000/- வழங்கும் திட்டம் நமது மாவட்டத்தில் ஏப்ரல் 2ஆம் தேதி முதல் தொடங்கப்படும். 440 நியாயவிலைக்கடைகளில் 2,27,448 தகுதி வாய்ந்த அரிசி பெறும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ரூ.1000/-வீதம் ரொக்க பணமும், அரிசி, சர்க்கரை, பருப்பு மற்றும் பாமாயில் ஆகிய பொருட்கள் விலையில்லாமலும் வழங்கப்படவுள்ளது. கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்கும் நடவடிக்கை காரணமாக நாள் ஒன்றுக்கு 100 குடும்ப அட்டைதாரர்களுக்கு முன்னதாகவே டோக்கன் வழங்கப்படும். டோக்கன் பெறுபவர்கள் தங்கள் பொருட்கள் பெறும் நியாயவிலைக்கடைகளுக்கு சென்று சமூக விலகலை கடைபிடித்து கூட்டம் கூடாத வகையில் ஒருவருக்கொருவர் அருகில் இல்லாமல் 2 மீட்டர் இடைவெளி விட்டு நின்று அரசு வழங்கும் இப்பொருட்களை பெற்று செல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அரியலூர் மாவட்டத்தில் வெளி மாநிலங்களிலிருந்து பணிபுரியும் பணியாளர்களுக்கு அவர்களை பணியில் அமர்த்தியுள்ள நிறுவனங்கள் அவர்களுக்குரிய இம்மாத சம்பளத்தினை தடையின்றி வழங்க வேண்டும். வெளி மாநிலத்தினர் மற்றும் வெளி மாவட்டத்தினர் அவர்கள் தங்கியிருக்கும் வீடுகளுக்கான வாடைகைகளை வீட்டு உரிமையாளர் இந்த மாதத்திற்கு அவர்களிடம் வாங்க வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறது.

அனைத்து கிராம ஊராட்சிகளிலும் பொதுமக்களிடையே சமூக இடைவெளி பேணுதலை உறுதிசெய்திட குறு வட்டார அளவில் கண்காணிப்பு குழுக்கள் அமைத்து 3 ஊராட்சிகளுக்கு ஒரு கண்காணிப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளனர். மக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் கிடைக்கும் நோக்கில் சமூக நெருக்கம் ஏற்படாத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். காய்கறிகளை மற்றும் மளிகை பொருட்களை பைகளிலேயே போட்டு வீடுகளுக்கு சென்று வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கி வரும் முறையின் மூலம் மக்கள் வெளியில் வருவதை குறைக்க முடியும். பொதுமக்களாகிய நாம் வெளியில் வராமல் இந்த நோய் தடுப்பிலிருந்து காப்பாற்றிக்கொள்ள உறுதுணையாக இருக்க வேண்டும் என மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் பொ.சந்திரசேகரன், மாவட்ட வருவாய் அலுவலர் கா.பொற்கொடி, திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தர்ராஜன், இணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) (பொறுப்பு) மரு.இளவரசன், கோட்டாட்சியர் ஜெ.பாலாஜி, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.வீ.சி.ஹேமசந்த்காந்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ரவிச்சந்திரன், நகராட்சி ஆணையர்கள் குமரன், அறச்செல்வி, தலைமை மருத்துவ அலுவலர் மரு.இரவிசங்கர் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**